## ஆழ்வாராசார்யர்கள் அருளிச் செய்த
# திருவேங்கடத் தமிழ் மாலை

---

## பெரியாழ்வார் அருளிச் செய்த
## பெரியாழ்வார் திருமொழி

### பெரியாழ்வார் திருமொழி 1-4-3

56 சுற்றும் ஒளி வட்டம் * சூழ்ந்து சோதி பரந்தெங்கும் *
எத்தனை செய்யிலும்[1] * என் மகன் முகம் நேர் ஒவ்வாய் **
வித்தகன் வேங்கடவாணன் * உன்னை விளிக்கின்ற *
கைத்தலம் நோவாமே * அம்புலீ! கடிதோடி வா

### பெரியாழ்வார் திருமொழி 1-8-8

104 என்னிது மாயம்? * என் அப்பன் அறிந்திலன் *
முன்னைய வண்ணமே கொண்டு * அளவாய் என்ன **
மன்னு நமுசியை * வானில் சுழற்றிய *
மின்னு முடியனே! அச்சோவச்சோ * வேங்கடவாணனே! அச்சோவச்சோ

### பெரியாழ்வார் திருமொழி 2-6-9

180 தென்னிலங்கை மன்னன் * சிரம் தோள் துணி செய்து *
மின்னிலங்கு பூண் * விபீடண நம்பிக்கு **
என்னிலங்கு நாமத்தளவும் * அரசு என்ற *
மின்னலங்காரற்கு ஓர் கோல் கொண்டு வா * வேங்கடவாணற்கு ஓர்
        கோல் கொண்டு வா

### பெரியாழ்வார் திருமொழி 2-7-3

184 மச்சொடு மாளிகை ஏறி * மாதர்கள் தம்மிடம் புக்கு *
கச்சொடு பட்டைக் கிழித்து * காம்புதுகில் அவை கீறி **
நிச்சலும் தீமைகள் செய்வாய்! * நீள் திருவேங்கடத்து எந்தாய்! *
பச்சைத் தமனகத்தோடு * பாதிரிப் பூச்சூட்ட வாராய்

### பெரியாழ்வார் திருமொழி 2-9-6

207 போதர் கண்டாய் இங்கே போதர் கண்டாய் *
        போதரேன் என்னாதே போதர் கண்டாய் *
ஏதேனும் சொல்லி அசலகத்தார் *
        ஏதேனும் பேச நான் கேட்க மாட்டேன் **
கோதுகலமுடைக்[2] குட்டனேயோ! *
        குன்றெடுத்தாய்! குடமாடு கூத்தா! *
வேதப் பொருளே! என் வேங்கடவா! *

---

[1] செய்யினும்
[2] கோதுகுலமுடை

வித்தகனே! இங்கே போதராயே

### பெரியாழ்வார் திருமொழி 3-3-4

247 கடியார் பொழிலணி வேங்கடவா!* கரும் போரேறே! * நீ உகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் * கொள்ளாதே போனாய் மாலே! **
கடிய வெங்கானிடைக் கன்றின் பின் போன* சிறுக்குட்டச் செங்கமல
அடியும் வெதும்பி * உன் கண்கள் சிவந்தாய் அசைந்திட்டாய் * நீ எம்பிரான்!

### பெரியாழ்வார் திருமொழி 5-4-1

463 * சென்னியோங்கு * தண் திருவேங்கடம் உடையாய்! * உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ! * தாமோதரா! சதிரா! **
என்னையும் என் உடைமையையும் * உன் சக்கரப் பொறி ஒற்றிக் கொண்டு *
நின் அருளே புரிந்திருந்தேன் * இனி என் திருக்குறிப்பே?

---

## ஆண்டாள் அருளிச் செய்த
## திருப்பாவை

### திருப்பாவை தனியன்

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே! * தொல்பாவை
பாடி அருள வல்ல பல்வளையாய்! * - நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம் *
நாம் கடவா வண்ணமே நல்கு

---

## ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி

### நாச்சியார் திருமொழி 1-1

504 * தையொரு திங்களும் தரை விளக்கித் *
தண் மண்டலமிட்டு மாசி முன்னாள் *
ஐய நுண்மணற் கொண்டு தெருவணிந்து *
அழகினுக்கு அலங்கரித்து அனங்க தேவா! **
உய்யவுமாங்கொலோ என்று சொல்லி *
உன்னையும் உம்பியையும் தொழுதேன் *
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை *
வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே

### நாச்சியார் திருமொழி 1-3

506 மத்தநன் நறுமலர் முருக்கமலர்

கொண்டு * முப்போதும் உன்னடி வணங்கி *
தத்துவமிலி என்று நெஞ்செரிந்து *
வாசகத்தழித்து உன்னை வைதிடாமே **
கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு *
கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி *
வித்தகன் வேங்கடவாணன் என்னும் *
விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே

## நாச்சியார் திருமொழி 4-2

535 * காட்டில் வேங்கடம் * கண்ணபுர நகர் *
வாட்டம் இன்றி * மகிழ்ந்துறை வாமனன் **
ஓட்டரா வந்து * என் கைப் பற்றி * தன்னொடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே!

## நாச்சியார் திருமொழி 5-2

546 வெள்ளை விளி சங்கு இடங்கையில் கொண்ட *
விமலன் எனக்கு உருக்காட்டான் *
உள்ளம் புகுந்து என்னை நைவித்து * நாளும்
உயிர்ப்பெய்து[3] கூத்தாட்டுக் காணும் **
கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக் *
களித்திசை பாடும் குயிலே! *
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது * என்
வேங்கடவன் வரக் கூவாய்

## நாச்சியார் திருமொழி 8

577 * விண்ணீல மேலாப்பு * விரித்தாற் போல் மேகங்காள்! *
தெண்ணீர் பாய் வேங்கடத்து * என் திருமாலும் போந்தானே? **
கண்ணீர்கள் முலைக் குவட்டில் * துளி சோரச் சோர்வேனை *
பெண்ணீர்மை ஈடழிக்கும் * இது தமக்கோர் பெருமையே

578 மாமுத்த நிதி சொரியும் * மாமுகில்காள்! * வேங்கடத்துச்
சாமத்தின் நிறம் கொண்ட * தாடாளன்[4] வார்த்தை என்னே! **
காமத் தீயுள் புகுந்து * கதுவப்பட்டு இடைக் கங்குல் *
ஏமத்தோர் தென்றலுக்கு * இங்கு இலக்காய் நான் இருப்பேனே

579 ஒளிவண்ணம் வளை சிந்தை * உறக்கத்தோடு இவை எல்லாம் *
எளிமையால் இட்டு என்னை * ஈடழியப் போயினவால் **
குளிர் அருவி வேங்கடத்து * என் கோவிந்தன் குணம் பாடி *
அளியத்த மேகங்காள்! * ஆவி காத்து இருப்பேனே

[3] உயிர்பெய்து
[4] தாளாளன்

580 மின்னாகத்து எழுகின்ற * மேகங்காள்! * வேங்கடத்துத்
தன்னாகத் திருமங்கை * தங்கிய சீர் மார்வர்க்கு **
என்னாகத்து இளங்கொங்கை * விரும்பித் தாம் நாள் தோறும் *
பொன்னாகம் புல்குதற்கு * என் புரிவுடைமை செப்புமினே

581 வான் கொண்டு கிளர்ந்து எழுந்த * மாமுகில்காள்! * வேங்கடத்துத்
தேன் கொண்ட மலர் சிதறத் * திரண்டேறிப் பொழிவீர்காள்! **
ஊன் கொண்ட வள்ளுகிரால் * இரணியனை உடல் இடந்தான் *
தான் கொண்ட சரிவளைகள் * தருமாகில் சாற்றுமினே

582 சலங்கொண்டு கிளர்ந்து எழுந்த * தண் முகில்காள்! * மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே * நிரந்தேறிப் பொழிவீர்காள்! **
உலங்குண்ட விளங்கனி போல் * உள் மெலியப் புகுந்து * என்னை
நலங்கொண்ட நாரணற்கு[5] * என் நடலை நோய் செப்புமினே

583 ✱ சங்கமா கடல் கடைந்தான் * தண் முகில்காள்! * வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக் கீழ் * அடி வீழ்ச்சி விண்ணப்பம் **
கொங்கை மேல் குங்குமத்தின் * குழம்பழியப் புகுந்து * ஒரு நாள்
தங்குமேல் * என் ஆவி தங்கும் என்று உரையீரே

584 கார் காலத்து எழுகின்ற * கார் முகில்காள்! * வேங்கடத்துப்
போர் காலத்து எழுந்தருளிப் * பொருதவனார் பேர் சொல்லி **
நீர் காலத்து எருக்கின் * அம் பழவிலை போல் வீழ்வேனை *
வார் காலத்து ஒரு நாள் * தம் வாசகம் தந்தருளாரே

585 ✱ மத யானை போல் எழுந்த * மாமுகில்காள்! * வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்! * பாம்பணையான் வார்த்தை என்னே! **
கதி என்றும் தான் ஆவான் * கருதாது * ஓர் பெண் கொடியை
வதை செய்தான் என்னும் சொல் * வையகத்தார் மதியாரே

586 ✱ நாகத்தின் அணையானை * நன்னுதலாள் நயந்துரை செய் *
மேகத்தை வேங்கடக் கோன் * விடு தூதில் விண்ணப்பம் **
போகத்தில் வழுவாத * புதுவையர் கோன் கோதை தமிழ் *
ஆகத்து வைத்துரைப்பார் * அவரடியார் ஆகுவரே

**நாச்சியார் திருமொழி 10-5**

601 பாடும் குயில்காள்! * ஈதென்ன பாடல்? * நல் வேங்கட
நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் * வந்து பாடுமின் **
ஆடும் கருளக் கொடி உடையார் * வந்து அருள் செய்து *
கூடுவர் ஆயிடில் * கூவி நும் பாட்டுகள் கேட்டுமே

[5] நாரணர்க்கு

**நாச்சியார் திருமொழி 10-8**

604 * மழையே! மழையே! மண்புறம் பூசி * உள்ளாய் நின்ற
மெழுகு ஊற்றினாற் போல் * ஊற்று நல் வேங்கடத்துள் நின்ற **
அழகப் பிரானார் தம்மை * என் நெஞ்சத்து அகப்படத்
தழுவ நின்று * என்னைத் ததர்த்திக்[6] கொண்டு * ஊற்றவும் வல்லையே?

---

[6] ததைத்து